# THE MADRAS LEGISLATIVE COUNCIL.

## Friday, the 1st March 1968.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

MR. CHAIRMAN: A number of questions have to be postponed today. Questions 46, 47, 131, 132, 133, 134, 135 and 136 are postponed.

### *Pumping out of water for irrigation from the Palar and South Pennar rivers*

* 137. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether permission has been granted to carry on agricultural operations in Chingleput district by pumping out water for irrigation from the Palar and South Pennar rivers by mechanical contrivance ; and

(*b*) whether such permission will be granted in the case of Vaigai River and Thamiravaruni River also ?

### விவசாயத்திற்கு பாலாறு, தென் பெண்ணையாறு தண்ணீர்

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கல்பட்டு மாவட்டத்தில் பாலாற்றிலும், தென் பெண்ணையாற்றிலும், ஆற்றில் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை வைத்து தண்ணீர் இறைத்து விவசாயம் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) இதைப்போன்று வைகை, தாமிரபரணி ஆற்றிலும் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை வைத்து வேளாண்மை மேற்கொள்ள அனுமதிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) இல்லை.

(இ) வைகை, தாமிரவருணி ஆறுகளில் உள்ள எல்லா வாய்க்கால்களையும் புதுப்பித்து அதன் விளைவுகளைச் சில காலம் கண்காணித்த பின்னரே அந்த ஆறுகளில் விசையேற்றங்களை நிறுவுவதற்கு அனுமதி வழங்குவது பற்றி ஆலோசிக்க முடியும்.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தலைவர் அவர்களே, ஆற்றில் தண்ணீர் போகாத நாட்களில் வறண்ட நாட்களில்தான் பெரும் பகுதி நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. அந்த நாட்களில் ஆற்றில் ஊற்றுக்கள் தோண்டி பம்பு செட் வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது வைகையிலே கால்வாய்கள் சீரமைப்பு வேலைகளைத் தொடங்க வேண்டுமென்ற யோசனை இருப்பதால் அவை அமைக்கப்பட்ட பிறகு அதன் விளைவுகளைப் பார்த்துக்கொண்டு பாசனத்திற்குப் போதுமானதாக இருக்குமா இல்லையா இப்படிப்பட்ட கிணறுகள் அலலது இறவை இயந்திரங்கள் அமைப்பதால் பாதிக்கப்படுமா எனபதை அரசு யோசித்துக்கொண்டு இருக்கிறது.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** பாசன கால்வாய்கள் தோண்ட இயலாத பகுதிகளில் அவை அனுமதிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** குறிப்பிட்டு இடத்தைச் சுட்டிக் காட்டி உணர்த்தினால் அரசு அதை யோசிக்கும்.

**திரு. என். வி. நடராசன் :** வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் எப்போது நிறைவேறும் ? அதற்காகும் செலவு என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டத்திற்கு ஏறத்தாழ நான்கு கோடி ரூபாய் அளவிற்கு மதிப்பிடப் பட்டிருக்கிறது. இந்த வைகைக் கால்வாய்க்குத் தக்க இடங்களில் அணைகள் கட்டுதல், படுகைப் பொறி மதகுகள் அல்லது தடுப்பு அணைகள் ஆகியவற்றைக் கட்டுவது, சில வாய்க்கால்களை ஒன்றாகச் சேர்ப்பதும் அவற்றை அணைக்கட்டின் மேல் பகுதிக்கு மாற்றுவது, வாய்க்கால்களின் மேல் பகுதியில் தலைமதகுகள் கட்டுவது, வாய்க்கால்களின் தூர் அகற்றி வைகையிலிருந்து பிரியும் எண்ணற்ற வாய்க்கால்களைச் சீரமைத்து மேம்படுத்துவதன் மூலம் நிலைமையைச் சீர் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 1968–69-ல் அந்த வேலை ஆரம்பிக்கப்படும். நான்காவது திட்டத்தில் அதற்காக ரூ. 300 லட்சம் ஒதுக்கி 1968–69-ல் ஒரு லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. என். வி. நடராசன் :** தாமிரபரணியில் இது போன்ற சீரமைப்புக் கால்வாய்த் திட்டம் நடைமுறைக்கு வருமா? அப்படியானால் அத் திட்டத்தின் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தாமிரபரணி வாய்க்கால்களை மாற்றியமைத்தலைப் பொறுத்தவரையில் மாற்றியமைத்தலுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட வாய்க்கால்கள் தற்சமய வேலையின் நிலை ஆகியவற்றின் விவரங்களைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். வடக்குக் கோடை மேலழகியான்கால், தெற்குக் கோடை மேலழகியான்கால், நதியுண்ணிக் கால், கோடகன்கால் ஆகிய திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு விட்டன. பாளையங்கால், மருதூர் மேலக்கால், மருதூர் கீழக்கால், இத் திட்டங்களின் வேலைகள் நடைபெற்று வருகின்றன. கன்னடியன் கால், திருநெல்வேலிக்கால் ஆகியவை 1968–69-ம் ஆண்டு இரண்டாம் பகுதி திட்டமாக எடுத்துக்கொள்ள நிரந்தர நிதிக் குழு இப்போது ஒப்புதல் அளித்திருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

### *Nandiyar New Channel*

* 138. *Q.*—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the action taken against the persons concerned for the iron-tank having been washed away due to the floods in Nandiyar new channel under the control of river irrigation (P.W.D.) and which is near the Palaiapatti villlage in Tiruchirappalli district ;

(*b*) whether steps will be taken for repairing the said tank and making water available for the Kuruvai cultivation next year ;

(c) whether the old tank is replaced or repaired ;

(*d*) whether the work is undertaken by the P.W.D. Workshop its-l' or cone through private companies by tender ?